**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# நகரில் உருமாற்றம் செய்யும் வகையிலான திட்டப்பணிகளைச் செய்ய நாட்டம் கொள்ளுவோர் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்குமாறு ப்ராம்ப்ட்டன் நகரம் வேண்டுகிறது

BRAMPTON, ON (March 22, 2023) – நகரில் உருமாற்றம் செய்யும் வகையிலான திட்டப்பணிகளைச் செய்ய நாட்டம் கொள்ளுவோர் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கும் திட்டத்தை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் துவக்குகிறது.

நாட்டம் கொள்ளுவோர் தங்கள் விருப்பத்தை வேண்டுகோளாக வைப்பதற்கான [Request for Expressions of Interest (RFEOI)] ஆவணத்தை நகரின் நில எழில் திட்டப்பணிக்கான வலைப்பக்கத்திற்கு (City Lands Project Webpage) வருகை புரிவதன் மூலம், தங்களின் முழுமையான திட்டங்களைச் சமர்ப்பிக்கலாம்; தாங்கள் வளர்ச்சிபெற வைக்க இருக்கும் இடப்பகுதியை, மிகமிக நவீனமயமான, பல்நோக்கு கிரிக்கெட் வளாகம் உள்ளிட்ட, நடைபோடுவதற்கான அண்டை அயல் பிரதேசத்துடன் கூடிய சுறுசுறுப்பான புறநகர் பகுதியாக உருவாக்க இதனைச் சமர்ப்பிக்கலாம்.

தகவல் தொடர்பு செயல்முறைகள் மற்றும் காலக்கெடு ஆகியவற்றுக்கான குறிப்பான அறிவுறுத்தல்கள், மற்றும் விசாரணைகள் மற்றும் பிரச்சனைகளைச் செவிமடுத்து தீர்வு வழங்கவல்ல அர்ப்பணிப்புடன் கூடிய வழிமுறையையும் இது கொண்டிருக்கும்.

திட்டப்பணிக்காக இதற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னஞ்சலாகிய rfeoi@brampton.caஇல் சாத்தியமான முன்மொழிவோர் தங்கள் கோரிக்கைகளை அனுப்பலாம்.

**நகரின் நிலம் சார்ந்த திட்டப்பணிகள் பற்றி**

நகரின் 2040 ஆம் ஆண்டுக்கான தொலைநோக்குப் பார்வையில் முக்கிய வாய்ப்பாக அடையாளம் காணப்பட்டுள்ள, ப்ராம்ப்ட்டன் நகரத்திற்குச் சொந்தமான 100 ஏக்கருக்கும் அதிகமான இந்த இடமானது, பலரும் வந்து சேருமிடமாக முன்னேற்றுவதற்கான உருமாற்றும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒரு தொழில்நுட்ப பகுப்பாய்வானது, இந்த மிகப்பெரிய, வளர்ச்சிபெற வைக்கக்கூடிய வளாகத்தை (முன்னர் "CAA லேண்ட்ஸ்" என குறிப்பிடப்பட்டது) ஒரு விளையாட்டு வளாகத்திலிருந்து ஒரு புதிய புறநகர் மையமாக மாற்றுவதற்கான மூலோபாய வாய்ப்பை அடையாளம்

கண்டுள்ளது; மற்றும் இது மக்கள் அடர்த்தி அதிகம் கொண்ட குடியிருப்பு, வணிகம், ஓய்வுக்கான முக்கிய பேருந்து போக்குவரத்து மற்றும் சுற்றுலா சார்ந்த வாய்ப்புகளையும் கொண்டிருக்கிறது.

தற்போது, கென்னடி சாலை தெற்கின் கிழக்கே, நெடுஞ்சாலை 410 க்கு மேற்கே மற்றும் 407 ETR இன் வடக்கே ஆகிய இந்த எல்லைகளுக்குள் CAA விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் (முன்னர் பவரேட் மையம்) அமைந்துள்ளன. "முழுமையான சமூகங்களை" உருவாக்குவதற்கான திட்டங்களை முன்னெடுப்பதற்கான நகரத்தின் தொலைநோக்குப் பார்வையுடன் நிலங்களின் இந்த மறுமேம்பாடு ஒருமித்துப் போகிறது".

**அறிஞர் கூற்றுக்கள்**

"கடந்த ஐந்து ஆண்டுகளாகவே, புதிய பல்நோக்கு கிரிக்கெட் வசதியமைப்புக் கட்டிடத்திற்கான கோரிக்கையை நிறைவேற்றவும், இந்த தனித்துவமான தளத்திற்கான அதன் சமுதாயக் கூட கட்டிடம் அமைப்பதற்கான தொலைநோக்குப்பார்வை கண்ணோட்டத்தை மேம்படுத்தவும் நகர நிர்வாகம் திட்டங்களை முன்கூட்டியே செய்ய முனைகிறது. இந்தத் தொலைநோக்குப்பார்வை உயிர்ப்பிக்கப்படுவதைக் காண உதவும் தைரியமான யோசனைகளைத் தேடத் தொடங்கும் போது இன்று ஒரு முக்கிய மைல்கல்லைக் கடக்கவிருக்கிறோம். சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வசதியமைப்புக்கள் மற்றும் சேவைகளை நாங்கள் ஒழுங்கமைத்து, திட்டமிடுகிறோம் என்பதை உறுதிப்படுத்த உதவுவதில், தங்களுடைய கருத்தை வழங்கிய குடியிருப்பாளர்கள், வணிகங்கள் மற்றும் உள்ளூர் பங்குதாரர்களுக்கு நன்றி."

*-பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகாம்*

"ப்ராம்ப்ட்டன் நகரம் வளர்ச்சிக்கு உதவுக்கூடிய ஆதரவாளர்களை இந்த விதிவிலக்கான உற்சாகமான முதன்மையான விளையாட்டு வசதி மற்றும் சமூகத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் பங்கேற்க அழைக்கிறது. திட்டப்பணியின் இந்தக் கட்டமானது, மற்றும் அதற்கானஅழைப்பானது, சாத்தியமான பங்காளிகள், நகர நிர்வாகம் மற்றும் அதன் குடியிருப்பாளர்களுக்கு நீண்டகால சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார நன்மைகளை வழங்குவதற்காக நகர நிர்வாகத்துடன் கூட்டுசேர்வதற்கான ஆரம்ப வாய்ப்பை பிரதிபலிக்கிறது."

*- மிச்செல் பல்லேஸ்ச்சி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6, தலைவர், திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்குழு*

"நகரில் உள்ள காலியிடங்களை புதிய புறநகர் மையமாக மாற்றுவதன் மூலம், அதிக அடர்த்தி கொண்ட குடியிருப்பு, வணிகம், ஓய்வு மற்றும் சுற்றுலா ஆகியவற்றுக்கான முக்கிய போக்குவரத்து சார்ந்த வாய்ப்புகளுடன், ப்ராம்ப்ட்டனுக்கான மகத்தான பொருளாதார திறனை மேலும் வெளிக்கொண்டு

வருவதற்கான மிகவும் உற்சாகமான மற்றும் உண்மையான வாய்ப்பு உள்ளது. இந்த பிரதான இடமானது, நகர நிர்வாகம் மற்றும் சாத்தியமான ஆதரவாளர்களுக்கு ஒரு மூலோபாய வாய்ப்பை வழங்குகிறது, மேலும் இந்த திட்டத்தின் அடுத்த கட்டம் எவ்வாறு வெளிவருகிறது என்பதைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறோம்."

*- குர்ப்ரதாப் சிங் தூர், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 9 & 106, தலைவர், பொருளாதார வளர்ச்சி*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca